# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2417/16 - 2024 දෙසැම්බර් මස 31 වැනි අඟහරුවාදා - 2024.12.31

*2417/16 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி.3/2013*(ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**பிமல் நிரோஷன் ரத்நாயக்க,**
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்
மற்றும்
சிவில் விமானசேவைகள் அமைச்சர்.

கொழும்பு, *2024,12.30.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* (*1*) இவ்வொழுங்குவிதிகள் *2024* ஆம் ஆண்டின் *3* ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (கலனின் வகுப்பாக்கமும் சான்றுப்படுத்துகையும்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(*2*) இவ்வொழுங்குவிதிகள், இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட எல்லாக் கலன்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.


1A - PG 6975 — 05 (2025/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட எல்லாக் கலன்களும், கலன்கள் கொண்டுசெல்லும் சரக்கு, கலன்கள் நிறைவேற்றும் தொழிற்பாடுகள், கலனின் உட்கருதப்பட்ட பாவனையும் வகையும் என்பவற்றின் அடிப்படையில் வகுதிப்படுத்தப்படுதல் வேண்டும். கலன்களின் வகுதிப்படுத்தல்கள் பின்வருமாறாகும்:-

(அ) தொகுதி 1 - பயணிக் கலன்கள்
(ஆ) தொகுதி 2 - சரக்குக் கலன்கள்
(இ) தொகுதி 3 - விளையாட்டுக்காக அல்லது பொழுதுபோக்குக்காக வர்த்தகப் பாவனையிலுள்ள கலன்கள்
(ஈ) தொகுதி 4 - விளையாட்டுக்காக அல்லது பொழுதுபோக்குக்காகத் தனியார் பாவனையிலுள்ள கலன்கள் (வாடகைக்கல்ல)
(உ) தொகுதி - வேலைப் படகுகள்
(ஊ) தொகுதி 6 - வழிகாட்டிப் படகுகள்

3. இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட எல்லாச் சமவாயஞ்சாராக் கலன்களும், 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந்தேதிய 2417/15 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வணிகக் கப்பற்றொழில் (நீர்ப்பரப்புகளை வகுதிப்படுத்துதல்) ஒழுங்குவிதிகளுக்கிணங்க, ஒரு தொழிற்பாட்டு இடப்பரப்புக்குக் குறித்தளிக்கப்படுதல் வேண்டும். தொழிற்பாட்டு இடப்பரப்பானது, வடிவமைப்பின் பரிசிலனையின்மீதும் கீழே நிரற்படுத்தப்பட்டவாறான ஏற்புடையற்பாலனவான தொழினுட்பச் சட்டக்கோவைகளிற் குறித்துரைக்கப்பட்டவாறான வடிவமைப்பு வகுதிகளுடன் இணைந்தும் குறித்தளிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலச்சட்டக்கோவை;

(ஆ) சிறிய மரக்கலச்சட்டக்கோவை (24 மீற்றர்களைக்கொண்ட நீளம்வரை);

(இ) பெரிய சமவாயஞ்சாரா மரக்கலச் சட்டக்கோவை (24 மீற்றர்களுக்கு மேற்பட்ட நீளம்); அத்துடன்

(ஈ) பெரிய உல்லாசப்படகுச் சட்டக்கோவை (24 மீற்றர்களுக்கு மேற்பட்ட நீளம்).

4. (1) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள சமவாயஞ்சாராக் கலன்களின் சோதனையும் ஆய்வும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றிதழ்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம், (2) ஆம் உபஒழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக, அவரது தத்துவங்களை ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கு அல்லது சான்றுப்படுத்துகின்ற குழுக்களுக்குக் கையளிக்கலாம்.

(4) இலங்கைத் துறைமுகங்களை வந்தடைகின்றவையும் வெளிநாடுகளில் பதிவுசெய்யப்பட்டவையுமான சமவாயஞ்சாராக் கலன்கள், பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க சமமான சான்றிதழ்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. (1) இலங்கையில் பதிவுசெய்யப்பட்டவையும் இலங்கை நீர்ப்பரப்புகளில் மட்டுமே தொழிற்படுகின்றவையுமான எல்லாச் சமவாயஞ்சாராக் கலன்களும், இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறு கலத்தொகுதிக்கும் உட்கருதப்பட்ட தொழிற்பாட்டு இடப்பரப்புக்கும் குறிப்பான சான்றுப்படுத்துகையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இலங்கையில் பதிவுசெய்யப்பட்டவையும் சர்வதேசக் கடற்பயணங்களில் தொழிற்படுகின்றவையுமான எல்லாச் சமவாயஞ்சாராக் கலன்களும், (1) ஆம் உபஒழுங்குவிதியின்படியான சான்றுப்படுத்துகையொன்றையும் அத்துடன் சேர்த்து மேலதிகமாகப் பின்வருவனவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) கலத்தின் முழுமொத்தத் தொன்னளவுக்கிணங்க ஏற்புடையற்பாலனவான சர்வதேசச் சமவாயங்களின்படியான அல்லது கலத்தின் முழுமொத்தத் தொன்னளவுக்கிணங்கச் சமவாயங்களின் பாகங்களின்படியான சான்றுப்படுத்துகை; அல்லது

(ஆ) தோதானவொரு விலக்களிப்பு அல்லது தனியொரு கடற்பயணச் சான்றுப்படுத்துகை.

6. பல்வகிபங்குப் பாவனைக்கு உட்கருதப்பட்ட சமவாயஞ்சாராக் கலன்கள், ஏற்புடையற்பாலனவான ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன் இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறு தோதான சான்றுப்படுத்துகையைக் கொண்டிருப்பதற்குத் தேவைப்படுத்தவும்படுகின்றன.

7. சமவாயஞ்சாராக் கலன்கள்தவிர்ந்த எல்லாக் கலன்களும், ஏற்புடையற்பாலனவான சர்வதேசச் சமவாயங்களின் சான்றுப்படுத்துகைத் தேவைப்பாடுகளை எதிர்கொள்ளுதல் வேண்டும்.

8. (1) பணிப்பாளர் தலைமையதிபதி,இவ்வொழுங்குவிதிகளிலுள்ள தேவைப்பாடுகளிலிருந்து, அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் ஒன்றில் செயல்முறைக்குகந்ததல்ல அல்லது நியாயமற்றதென அவர் திருப்திப்படின், ஏதேனும் சமவாயஞ்சாராக் கலனுக்கு விலக்களிக்கலாம். அவைபற்றிய விபரங்களும் அவற்றுக்கான காரணங்களும் விலக்களிப்புச் சான்றிதழிற் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, நியாயமான அறிவித்தல் கொடுப்பதற்கமைய, அத்தகைய ஏதேனும் விலக்களிப்பை மாற்றலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

9. இவ்வொழுங்குவிதிகளில்–

"படகு" என்பது, நீளத்தில் 24 மீற்றர்களுக்குக் குறைவான ஒரு கலன், அல்லது 150 முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான ஒரு கலன் என்று பொருளாகும். படகொன்று ஒரு படகாக, காற்றுமெத்தை வாகனமாக, பாய்மர மரக்கலமாக அல்லது காற்றடிக்கத்தக்க கலமாக இருக்கமுடியும்;

"சரக்கு" என்பது, படகுக்கான எரிபொருள், அடிச்சுமை (ஒன்றில் திண்ம அல்லது திரவ), கப்பலில் பயன்படுத்தப்படவேண்டிய நுகர்பொருட்கள், படகின் நிரந்தரமான கருவிகலத்தொகுதி மற்றும் சாதனங்கள், படகுக்கான களஞ்சியப்பொருட்கள் மற்றும் உதிரிப் பல்லிணை, கப்பற்றொகுதியினரும் அவர்களின் சொந்தப் பயணப்பொதிகளும், அத்துடன் பயணிகளும் அவர்களின் சொந்தப் பயணப்பொதிகளும், மற்றும் செயற்பாட்டுடன் தொடர்புபட்ட சாதனங்கள் என்பனதவிர, படகின்மூலம் இடம்பெயர்க்கப்படுகின்ற எல்லா இனங்களும் என்று பொருளாகும்;

"சரக்குக் கலன்" என்பது, ஒரு பயணிக் கப்பலல்லாத ஏதேனும் கலன் என்று பொருளாகும்;

"சான்றுப்படுத்துகின்ற குழு" என்பது, சமவாயஞ்சாராக் கலன்களின் ஆய்வு, சோதனை மற்றும் சான்றுப்படுத்துகை நோக்கத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டு உரிமமளிக்கப்பட்டுள்ள ஒரு கம்பெனி அல்லது ஓர் உயர்தொழில்சார் ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"மரக்கலம்" என்பது, கப்பலுக்குள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"உள்நாட்டுக் கடற்பயணம்" என்பது, இலங்கையிலுள்ள ஒரு துறைமுகத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து இலங்கையிலுள்ள அதே அல்லது வேறொரு துறைமுகத்துக்கான அல்லது இடத்துக்கான ஒரு கடற்பயணம் என்று பொருளாகும்;

"பாதை" என்பது, முடிவிடங்களுக்கிடையே, அல்லது ஓர் ஆற்றை அல்லது ஒப்பீட்டளவில் வேறு சிறிய நீர்ப்பரப்பைக் கடந்து வர்த்தக அடிப்படையில் பயணிகளையும் அத்துடன் அல்லது தானியங்கிகளையும் சரக்கையும் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு கலன் என்று பொருளாகும்;

"முழுமொத்தத் கொன்னளவு (முதொ)" என்பது, 1969 ஆம் ஆண்டின் கப்பல்களின் தொன்னளவு அளவீடுமீதான சர்வதேசச் சமவாயத்தினால் கொடுக்கப்பட்டவாறானதும் தொன்னளவுச் சான்றிதழிற் குறிப்பிடப்பட்டவாறானதுமான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"நீளம்" என்பது, ஒன்றில் அடிக்கட்டையின் மேற்புறத்திலிருந்து அளவீடுசெய்யப்பட்ட ஆகக்குறைந்த வார்ப்பிட்ட ஆழத்தின் 85 சதவீதத்தில் ஒரு நீர்க்கோட்டின்மீதான மொத்த நீளத்தின் 96 சதவீதம், அல்லது அந்நீர்க்கோட்டின்மீது தண்டின் முற்பக்கத்திலிருந்து திசைதிருப்பி இருப்பின் அச்சுவரையான நீளம், இவற்றுள் எது கூடுதலாகவுள்ளதோ அது என்று பொருளாகும். அடிக்கட்டையின் சரிவுடன் வடிவமைக்கப்பட்டவொரு படகில், இந்நீளம் எந்த நீர்க்கோட்டின்மீது அளவீடுசெய்யப்படுகின்றதோ அந்த நீர்க்கோடு, வடிவமைப்பு நீர்க்கோட்டுக்குச் சமாந்தரமானதாகஇருத்தல் வேண்டும்;

"கடல் மைல்" என்பது, 1852 மீற்றர்கள் என்று பொருளாகும்;

"சமவாயஞ்சாராக் கலன் "என்பது, சர்வதேசச் சமவாயங்கள் ஏற்புடையனவாகாத ஒரு கலன், அத்துடன்/அல்லது கலன்களின் முழுமொத்தத் தொன்னளவு காரணமாக ஏற்புடையனவாகின்ற ஏற்புடையற்பாலனவான சர்வதேசச் சமவாயங்களிலிருந்து எந்த உள்நாட்டுக் கடற்பயணங்களுக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதி விலக்களிப்புகளை வழங்கியுள்ளாரோ அந்த உள்நாட்டுக் கடற்பயணங்களின்மீது மட்டுமே தொழிற்படுகின்ற கலன்கள் என்று பொருளாகும். கலனின் முழுமொத்தத் தொன்னளவு அல்லது தொழிற்பாட்டு இடப்பரப்புக் காரணமாகச் சர்வதேசச் சமவாயங்களின் பாகங்கள் ஏற்புடையனவாகவுள்ளவிடத்து, வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விலக்களிப்பு வழங்கப்பட்டிருந்தாலொழிய அவை ஏற்புடையனவாகும்;

"பயணிக்கலன்" என்பது, பன்னிரெண்டு பயணிகளுக்கு மேற்பட்டோரைக் கொண்டுசெல்கின்ற ஒரு கப்பல் என்று பொருளாகும்;

"வழிகாட்டிப் படகு" என்பது, வழிகாட்டுகைச் சேவைகளில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஒரு படகு என்று பொருளாகுமென்பதுடன் ®அர்ப்பணிக்கப்பட்ட வழிகாட்டிப் படகு@ என்பது, வழிகாட்டுகைச் சேவைகளிலும் மற்றும் வழிகாட்டுகை மாவட்டத்திலுள்ள படகுகளுக்கு அல்லது அவற்றிலிருந்து ஆளணியினரை, அஞ்சலை, அத்துடன்/அல்லதுசிறிய தொகைகளினவான களஞ்சியப்பொருட்களைக் கொண்டுசெல்லுதல்போன்ற பொறுப்பேற்கப்பட்ட வேறு இடைக்கிடையான சேவைகளிலும் பிரதானமாகத் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எத்தகைய அளவினதுமான ஒரு வழிகாட்டிப் படகு என்றும் பொருளாகும்;

"ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு" என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கான சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"பதிவு" என்பது, இலங்கைத் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சின் வணிகக் கப்பற்றொழிற் செயலகத்துடன் கலனொன்றைப் பதிவுசெய்கின்ற நடைமுறை என்று பொருளாகும்;

"கப்பல்" என்பது, நீளத்தில் 24 மீற்றர்களுக்கு மேற்பட்ட நீர்செல் கலன், அல்லது 150 முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்டவொரு கலன் என்று பொருளாகும்;

"கலன்" என்பது, இவ்வொழுங்குவிதிகளில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான ஒரு கப்பல் அல்லது படகு என்று பொருளாகும்;

"கலத்தொகுதிகள்" என்பது, இவ்வொழுங்குவிதிகளினால் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறு அதன் உட்கருதப்பட்ட பாவனைக்கிணங்க ஒரு படகின் அல்லது கப்பலின் வகுதிப்படுத்துகை என்று பொருளாகும்;

"வேலைப்படகு" என்பது, ஓர் அர்ப்பணிக்கப்பட்ட வழிகாட்டிப் படகு நீங்கலாக, விளையாட்டு அல்லது பொழுதுபோக்குத்தவிர்ந்த நோக்கங்களுக்காக வர்த்தகப் பாவனையிலுள்ள சமவாயஞ்சாராக் கலனொன்று என்று பொருளாகும்.

## அட்டவணை

(ஒழுங்குவிதி5(1))

இலங்கை நீர்ப்பரப்புகளில் மட்டுமே தொழிற்படுகின்ற சமவாயஞ்சாராக் கலன்கள், இயைபான சட்டக்கோவைகளில் குறித்துரைக்கப்பட்டவாறும் கலனின் அளவு காரணமாகத் தேவைப்படுத்தப்படுகின்றவாறும் பின்வருவனவற்றிலிருந்து தோதான சான்றுப்படுத்துகையைத் தேவைப்படுத்துவனவாகும்:

1. தொகுதி 1 – பயணிக் கலன் சான்றுப்படுத்துகை –

(அ) உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் – பயணி அல்லது

(ஆ) சிறிய மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் (நீளத்தில் 24 மீற்றர்கள்வரை)– பயணி அல்லது

(இ) பெரிய சமவாயஞ்சாரா மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் (நீளத்தில் 24 மீற்றர்களுக்கு மேற்பட) – பயணி

(ஈ) தொன்னளவுச் சான்றிதழ் (கலனானது 24 மீற்றர்களுக்கு மேற்பட்டதாகவிருப்பின்)

(உ) சுமைவரைச் சான்றிதழ் – 24 மீற்றர்களுக்கு மேற்பட்ட புதிய கலன்களுக்காகவும் 150 குழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்ட (1972 சனவரி மாதத்துக்குமுன்னர் கட்டப்பட்ட) ஏலவேயுள்ள கலன்களுக்காகவும் தேவைப்படும்

(ஊ) காப்பு வானொலிச் சான்றிதழ் – 300 முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்ட கலன்கள்

*2. தொகுதி 2 – சரக்குக் கலன் சான்றுப்படுத்துகை*

- *உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் – பயணிசாரா அல்லது*
- *சிறிய மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் (நீளத்தில் 24 மீற்றர்கள்வரை)-பயணிசாரா அல்லது*
- *பெரிய சமவாயஞ்சாரா மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் (24 மீற்றர்களுக்கு மேற்பட) – பயணிசாரா*
- *தொன்னளவுச் சான்றிதழ் (கலனானது 24 மீற்றர்களுக்கு மேற்படவிருப்பின்)*
- *சுமைவரைச் சான்றிதழ் – 24 மீற்றர்களுக்கு மேற்பட்ட புதிய கலன்களுக்காகவும் 150 முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்ட (1972 சனவரி மாதத்துக்குமுன்னர் கட்டப்பட்ட) ஏலவேயுள்ள கலன்களுக்காகவும் தேவைப்படும்*
- *காப்பு வானொலிச் சான்றிதழ் – 300 முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்ட கலன்கள்*
- *தகுதிச் சான்றிதழ் (இரசாயன அல்லது வாயு) – இரசாயனத் தாங்கற்கலன்களுக்காக அல்லது வாயு கொண்டுசெல்கின்றவைக்காக*
- *அபாயகரமான பண்டங்களைக் கொண்டுசெல்லும் கப்பல்களுக்காக விசேட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றமைக்கான சான்றிதழ் (IMDG சட்டக்கோவை)*

*3. தொகுதி 3 – விளையாட்டு அல்லது பொழுதுபோக்குச் சான்றுப்படுத்துகைக்காக வர்த்தகப் பாவனையிலுள்ள கலன்கள்*

- *உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் அல்லது*
- *சிறிய மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் (நீளத்தில் 24 மீற்றர்கள்வரை) அல்லது*
- *பெரிய சமவாயஞ்சாரா மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் (நீளத்தில் 24 மீற்றர்களுக்கு மேற்பட)*
- *தொன்னளவுச் சான்றிதழ் (கலனானது 24 மீற்றர்களுக்கு மேற்படவிருப்பின்)*
- *சுமைவரைச் சான்றிதழ் – 24 மீற்றர்களுக்கு மேற்பட்ட புதிய கலன்களுக்காகவும் 150 முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்ட (1972 சனவரி மாதத்துக்குமுன்னர் கட்டப்பட்ட) ஏலவேயுள்ள கலன்களுக்காகவும் தேவைப்படும்*
- *காப்பு வானொலிச் சான்றிதழ் – 300 முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்ட கலன்கள்*

*4. தொகுதி 4 – விளையாட்டு அல்லது பொழுதுபோக்குச் சான்றுப்படுத்துகைக்காக (வாடகைக்கல்ல) தனிப்பட்ட பாவனையிலுள்ள கலன்கள்*

- *உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் அல்லது*
- *சிறிய மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் ( நீளத்தில் 24 மீற்றர்கள்வரை) அல்லது*
- *பெரிய உல்லாசப்படகுச் சட்டக்கோவைச் சான்றிதழ் ( நீளத்தில் 24 மீற்றர்களுக்கு மேற்பட)*
- *தொன்னளவுச் சான்றிதழ் (கலனானது 24 மீற்றர்களுக்கு மேற்படவிருப்பின்)*

*இலங்கையில் தன்னிச்சையாகப் பதிவுசெய்யப்படாதபோது, விளையாட்டுக்காக அல்லது பொழுதுபோக்குக்காகத் தனிப்பட்ட பாவனையிலுள்ள சமவாயஞ்சாராக் கலன்களுக்குப் பின்வரும் தொழினுட்பச் சட்டக்கோவைகளுள் ஒன்றுக்கெதிராகச் செல்லுபடியான இணங்கியொழுகுகைப் பதிவேடொன்று தேவைப்படும்*

- உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலச் சட்டக்கோவை இணங்கியொழுகுகைப் பதிவேடு

- சிறிய மரக்கலச் சட்டக்கோவை இணங்கியொழுகுகைப் பதிவேடு

- பெரிய உல்லாசப்படகுச் சட்டக்கோவை இணங்கியொழுகுகைப் பதிவேடு

5. தொகுதி 5 - வேலைப்படகுகள் சான்றுப்படுத்துகை

- உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் அல்லது

- சிறிய மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் (நீளத்தில் 24 மீற்றர்கள்வரை) அல்லது

- பெரிய சமவாயஞ்சாரா மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் (நீளத்தில் 24 மீற்றர்களுக்கு மேற்பட)

- தொன்னளவுச் சான்றிதழ் (கலனானது 24 மீற்றர்களுக்கு மேற்படவிருப்பின்)

- சுமைவரைச் சான்றிதழ் - 24 மீற்றர்களுக்கு மேற்பட்ட புதிய கலன்களுக்காகவும் 150 முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்ட (1972 சனவரி மாதத்துக்குமுன்னர் கட்டப்பட்ட) ஏலவேயுள்ள கலன்களுக்காகவும் தேவைப்படும்

- காப்பு வானொலிச் சான்றிதழ் - 300 முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்ட கலன்கள்

6. தொகுதி 6 - வழிகாட்டிப் படகுகள் சான்றுப்படுத்துகை

- உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் அல்லது

- சிறிய மரக்கலச் சட்டக்கோவைச் சான்றிதழ் (நீளத்தில் 24 மீற்றர்கள்வரை)

EOG 01 - 0011

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.